நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (21.06.2023) தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை தலைமையிடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆணையாளர் (பொ) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர்கள் விஷு மஹாஜன், (வருவாய் (ம) நிதி), திருமதி ஷரண்யா அறி, (கல்வி), எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்திய வட்டாரம்), எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு வட்டாரம்) உட்பட பலர் உடனிருந்தனர்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து

மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடித்திடுவீர்!

அமைச்சர் கே.என்.நேரு அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, ஜூன் 22 -

தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், அனைத்து மழைநீர் வடிகால் பணிகளையும் விரைந்து முடித்திட உத்தரவிட்டார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் தற்பொழுது பெய்த மழையினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடிக்கப்பட வேண்டிய பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசும்போது தெரிவித்ததாவது:

தற்பொழுது நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை வடகிழக்குப் பருவமழை தொடங்கு வதற்கு முன்பாக முழுமையாக முடித்திட வேண்டும். மழை நீர் வடிகால்களில் படிந்துள்ள மண் துகள்களை முழுமையாக அகற்றிட வேண்டும். மாநகராட்சிக் குட்பட்ட நீர்நிலைகளிலும், நீர்வளத்துறையின் கட்டுப் பாட்டில் உள்ள அடையாறு, கூவம் உள்ளிட்ட ஆறுகள், கால்வாய்களிலும் ஆகாயத் தாமரைகளை அகற்றி தூர்வாரும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு முடித்திட வேண்டும்.

மேலும் மழையினை எதிர்நோக்கி அனைத்து மோட்டார் பம்புகள் மற்றும் இயந்திரங்கள் தயார்நிலையில் இருந்திட வேண்டும். மழையின் காரணமாக எப்பகுதியிலும் தண்ணீர் தேங்காதவகையில் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான பணிகளை மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் தொடர்கண்காணிப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர் வடிகால் அமைக்கப்படும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டும். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை, மின்துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி துரிதமாக மேற்கொள்ள வேண்டும். சாலைப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும். நிவாரண மையங்களை தயார் நிலையில் வைத்திட வேண்டும்.

இதுவரை 1154 கி.மீ. மழைநீர் வடிகால் பணிகள் தொடங்கப்பட்டு 800 கி.மீ, மழைநீர் வடிகால் பணிகள் ரூ.1,540 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 354 கி.மீ,. மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும் உடனடியாக முடித்திட வேண்டும். புதிதாக தொடங்கப்பட்டுள்ள 85.69 கி.மீ. நீளத்திலான ரூ.245.37 கோடி மதிப்பீட்டிலான மழைநீர் வடி கால் பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாகவே முடித்திட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் வசிக்கும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. தொடர்ந்து, மக்களுக்கான நோய்த்தடுப்பு சிகிச்சைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். குடிநீர், கழிவுநீர் மற்றும் மின்சார வாரியப் பணிகள் போன்ற சாலை வெட்டுக்களை உடனுக்குடன் சீர் செய்ய வார்டு வாரியாகவும், மண்டல வாரியாகவும், தலைமையிடத்திலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

முன்னதாக, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தலைமையிடத்தில் உள்ள ஒருங்கி ணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆணையாளர் (பொ) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், துணை ஆணையாளர்கள் விஷு மஹாஜன், (வருவாய் (ம) நிதி), திருமதி ஷரண்யா அறி, (கல்வி), எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்), எஸ். ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்திய வட்டாரம்), எம். சிவகுரு பிரபாகரன், (வடக்கு வட்டாரம்), தலைமைப் பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவான்மியூர் – தரமணியில்

துணை மின் நிலையங்களில் கட்டுமானப் பணிகள்!

அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு!

சென்னை, ஜூன் 22-

சென்னை திருவான்மியூர் மற்றும் தரமணியில் புதிதாக அமையவுள்ள வலிம காப்பு துணை மின் நிலையங்களின் கட்டுமானப் பணிகளை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

சென்னை திருவான்மியூரில் நேற்று தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் சார்பில் ரூ.92.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழகத்திலேயே முதன்முறையாக, முழுவதுமாகவே "எண் முறை தொழில் நுட்பத்தில்" (Digital Technology) அமைக்கப்பட்டு வரும் 230/33 கிலோ வோல்ட் எண்முறை வளிம காப்பு {Digital Gas Insulated Substation) துணைமின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் ஆய்வு செய்தார். ஆய்வின்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன், இயக்குநர் (திட்டம்) எம்.இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பின்னர், அமைச்சர் அவர்கள் தரமணியில் 708 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 400/230/110/33 கிவோ வளிமகாப்பு (Gas Insulated Substation) துணைமின் நிலையமாக தரம் உயர்த்தி மேம்படுத்த நடந்து வரும் கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்தார். பின்னர், தற்போது இயங்கி வரும் 230/110/33 கிவோ துணைமின் நிலையத்தினை பார்வையிட்டு செயல்பாடு குறித்து கேட்டறிந்தார்.

திருவான்மியூரில் அமையவுள்ள 230/33 கிவோ துணை மின் நிலையம் மற்றும் தரமணியில் தரம் உயர்த்தி மேம்படுத்தப்படும் 400/230/110/33 கிவோ துணை மின் நிலையம் மூலம் திருவான்மியூர், தரமணி, பெசன்ட் நகர், காந்திநகர், கொட்டிவாக்கம், ஈஞ்சம்பாக்கம், வேளச்சேரி மற்றும் பெருங்குடி பகுதிகளிலுள்ள சுமார் நான்கு இலட்சம் மின் நுகர்வோர்களுக்கு தடையற்ற, தரமான மின்சாரம் வழங்க இயலும்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் தொழில்துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறைகளில் அதிவேக வளர்ச்சி பெற்று வருவதால் பெருகி வரும் மின்தேவையைக் கருத்தில் கொண்டு அமைச்சர், மேற்படி பணிகளை விரைந்து முடித்து புதிய துணைமின் நிலையங்களை இயக்கத்திற்கு கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பாக மாநில நெடுஞ்சாலை பூங்காக்களில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை பொன்விளைந்தகளத்தூர் பகுதியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி உள்ளனர்.

நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (21.06.2023) சென்னை, திருவான்மியூரில் அமைக்கப்பட்டு வரும் 230/33 கி.வோ. வளிம காப்பு துணை மின் நிலைய கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார். உடன், தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகத் தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன், இயக்குநர் (திட்டம்) எம்.இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

பஞ்சாப்: பக்ரா கால்வாயில் விழுந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றிய

இராணுவ வீரர் நவநீதகிருஷ்ணனுக்கு பாராட்டு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டரில் பதிவு!

சென்னை, ஜூன் 22-

பஞ்சாபில் பக்ரா கால்வாயில் விழுந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றிய இராணுவ வீரர் நவநீதகிருஷ்ணனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் பக்ரா கால்வாயில் தவறுதலாக விழுந்த மாணவியின் உயிரை துணிச்சலாகக் காப்பாற்றிய இராணுவ வீரர் நவநீதகிருஷ்ணனைப் பாராட்டி வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப்பதிவு வருமாறு :

இன்னல் நேரும் தருணத்தில் தன்னுயிர் பாராமல் பஞ்சாப் மாணவியின் உயிரைக் காப்பாற்றிய இராணுவ வீரர் நவநீத கிருஷ்ணனை வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

திராவிடத்துத் தீரரான கலைஞருக்கு வீரவணக்கம்!

திருவாரூரில் 'கலைஞர் கோட்டம்' - முதல்வருக்கு பாராட்டு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 22 -

திராவிடத்துத் தீரர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூரும் வண்ணம் அவர் வாழ்ந்த ஊரில் "கலைஞர் கோட்டமும், கலைஞர் சிலையும்" திறக்கப்படுவது குறித்து பெருமகிழ்ச்சியோடு, நன்றி உணர்வுடன் வீர வணக்கம் செலுத்தும் வகையில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இன்று (20.6.2023) நமது சுயமரியாதைக்காரராக இறுதிவரை வாழ்ந்து, வரலாறு படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு தொடக்கத்தையொட்டி, அவர் பிறந்த மண்ணான திருவாரூரில் (காட்டூரில்) மிக்கப் பொருத்தமாக "கலைஞர் கோட்டம்" அமைக்கப்பட்டு திறக்கப்படுகிறது!

திருவாரூர் – காட்டூரில் "கலைஞர் கோட்டம் திறப்பு!

கலைஞரின் சிலை அவரால் பயிற்றுவிக்கப்பட்டு, 'திராவிட மாடல்' அரசின் மாண்பை இந்தியாவிற்கே பறைசாற்றி, எதேச்சதிகார ஆக்டோபஸ் கொடுங்கரங்களுக்குள் சிக்கவிடாமல் தடுக்கும் அரசியல் போர்ப் படைத் தளபதியான நமது முதலமைச்சர் மாண்புமிகு மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 20.6.2023 அன்று மாலை திறக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சமூகநீதிப் போராளி லாலுபிரசாத் அவர்களின் புதல்வரும், பீகாரின் நம்பிக்கை நட்சத்திரமும், துணை முதலமைச்சருமான தேஜஸ்வி அவர்களும் கலந்துகொண்டு விழா மாண்பினைப் பெருக்குகின்றனர்! இது திராவிடர் இயக்க வரலாற்றில் பொன்னேடு!

கலைஞரின் நினைவைப் போற்றும் சின்னங்கள்!

முதல் தொடக்கம் தலைநகர் சென்னையில் 7.6.2023 அன்று மக்கள் கடல் திரண்ட கூட்டணித் தலைவர்கள் பங்கேற்ற மாநாடும், அதில் முதலமைச்சர் விடுத்த அரசியல் ஏவுகணையும் எதிரிகளைக் குலைநடுங்கச் செய்தன! அதன்பின் ஒரு தலைசிறந்த பன்னோக்கு மருத்துவமனையை சென்னை கிண்டி பகுதியில் நமது முதலமைச்சர், கலைஞர் பெயரில் திறந்து வைத்தார்!

மதுரை மாநகரில் அறிவின் தேக்கமான அரிய நூலகமும் அவர் பெயரில் விரைவில் திறக்கப்படவிருக்கிறது! எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, கலைஞரின் நினைவிடத்தில் ஒரு புதுமைப் பொலிவும், அவரது பேனாவே அடையாளச் சின்னமாக கடலில் அமைவதை சிறிது தூரம் சென்று பார்த்து, அறிந்து, கற்றுத் திரும்புகின்ற ஓர் ஏற்பாடு, சென்னை நகரத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவில் எங்குமில்லாத அமைதிப் புரட்சிக்கு அடித்தளமிடவிருக்கிறது அந்தப் பறிக்கப்பட முடியாத பேனாவின் எழுத்துகள்!

தந்தை பெரியாரே கலைஞருக்குச் சிலை திறக்கச் சொன்னது சாதாரணமா?

வாளைவிட வலியதான பேனாவின் வலிமையைக் காட்டியவர். அவரது அமைதியின் தொடர்ச்சியை, அழகின் சிரிப்பைப் புலப் படுத்தும் அந்த பேனா நினைவுச் சின்னம் அந்த வங்கக் கடலில் தங்கமாய் தகத்தகாய ஒளிர்விடும். இப்படிப்பட்ட பல சிறப்புகள் கலைஞர் என்ற உழைப்பின் உருவமாம், பல்திறன் கொள்கலான அவருக்கு மட்டும் பெருமை சேர்ப்பன அல்ல; அதையும் தாண்டி அவர் கொண்ட சுயமரியாதை பகுத்தறிவு திராவிடக் கொள்கை வெற்றியை திக்கெட்டும் முரசொலித்து முழங்குவது சாதனைக்கான சாதனை! சரித்திரப் போதனைக்கான நல்லதோர் வாய்ப்பு காட்சியும், கருத்தும் எவரும் பெறலாம்!

மற்ற பல தலைவர்களுக்குக் கிட்டாத பெருமை, எட்டாத புகழ் நமது நூற்றாண்டு விழா நாயகர் கலைஞருக்கு எது தெரியுமா? பகுத்தறிவுப் பலகவன், சுயமரியாதை இயக்கங்கண்ட அந்த சூரியன், இந்த உதய சூரியன் இளந்தலைவருக்கு அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோதே தனிச் சிலையை சென்னையில் நிறுவ வலுவான வாதங்களை இன எதிரிகளின் வாயடைத்து வைக்க முன்மொழிந்தார் தந்தை பெரியார்!

இந்தப் பொன்னான வாய்ப்பு எவருக்குக் கிடைக்கும்? கலைஞர் அப்போது மறுத்தார் தந்தைக்கு நன்றி கூறினார். பிறகு 1971 இல் மகத்தான வெற்றியை தேர்தலில் பெற்று (184 இடங்களில்) மீண்டும் கலைஞருக்கு சென்னையில் சிலை வைக்க குழு அமைத்தார். அப்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார் தந்தை பெரியார்!

கலைஞருக்கு சிலை வைக்க, அன்னை மணியம்மையார் முயன்றபோது, சென்னையில் அய்யாவுக்குத் தி.மு.க. சிலை வைத்த பிறகு, செய்யலாம் என்று கூறி, அதைத் தடுத்தார். கலைஞர்! சொன்னபடியே தந்தை பெரியார் சிலையை சென்னை அண்ணா சாலையில் தி.மு.க. திறந்தது. பிறகு, திராவிடர் கழகம் அன்னை மணியம்மையார் தலைமையில், தவத்திருகுன்றக்குடி அடிகளார் முன்னிலையில், அண்ணாசாலையில், கலைஞரின் சிலை திராவிடர் கழகத்தால் திறக்கப்பட்டது 1975 ஆம் ஆண்டு!

வீர வணக்கம் செலுத்தி, நன்றி கூர்வோம்!

இப்படி அவரது சிலைக்கே ஒரு நீண்ட வரலாறு உண்டு. இன்று அவர் பிறந்த மண்ணில் அந்த அரிய மாமனிதரை திராவிடத்துத் தீரரை நன்றியோடு நினைவு கூர்ந்து, திராவிட ஆட்சியின் மாட்சியை மீட்சியாக்கி "தலைவரே உங்களுக்கு எங்கள் வீர வணக்கம் நன்றியோடு" என்று முழங்குகிறோம்!

வாழ்க கலைஞர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (21.06.2023) ஆணையர் அலுவலகத்தில் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு செல்வதற்கு மாற்றுப்பாதை அமைக்கும் பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.